திரு. ஜி. மூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆதித் திராவிடர் என்ற பெயருக்கு எதிர்ப்புகள் வந்து இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது குறித்துப் பரிசீலிப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். தயவு செய்து, அது குறித்து பரிசீலிக்க வேண்டாம். இந்த ஆதித் திராவிடர் என்ற பெயரையே வைத்துக்கொள்ள அரசு கண்டிப்பாக முன் வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நல்ல ஆலோசனை.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு : —[ஓர் உரையில் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

அ. கேள்விகள் கட்சிவாரியாக எடுத்துக் கொள்வது

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய கேள்விப் பட்டியலில் 20 கேள்விகள் இடம் பெற்றுள்ளன. நான் திரும்பத் திரும்பப் பார்த்தேன். எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் கொடுத்துள்ள கேள்விகளில் ஒன்றாவது இடம் பெற்று இருக்கிறதா, அனுமதிக்கப் பட்டு இருக்கிறதா என்று. ஆனால் ஒன்றும் இல்லை. ஆனால் போனால் போகட்டும் பாவம் என்று நேற்றைக்கு முன்தினம் திருமதி இராஜாம்பாள் கொடுத்த கேள்வி ஒன்று இடம் பெற்றுள்ளது. நான் இன்னும் சொல்வேன். இந்த மன்றத்தில் வருகின்ற செவ்வாய்க் கிழமை அன்று எடுத்துக்கொள்ளப் படவிருக்கிற வினாப் பட்டியலையும் பார்த்தேன். அதிலேயும் ஒரு கேள்வி கூட இடம்பெறவில்லை. திரும்பத் திரும்ப ஒரு சிலர் கேட்டுள்ள கேள்விகளே இதில் இடம் பெறுவதால், நாங்கள் எங்களுடைய பணியை இங்கே சரிவர நிறைவேற்ற வில்லையோ என்கிற ஐயப்பாடு மக்களுக்கு எழக்கூடும். எங்களுடைய கேள்விகள் இந்தக் கேள்விப் பட்டியலில் இடம் பெறுவதற்கு நாங்கள் என்னதான் செய்யவேண்டும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்; தினந்தோறும் எப்படியாவது 3 துணை வினாக்கள் கேட்க மாண்புமிகு உறுப்பினர் வாய்ப்புப் பெற்று விடுகிறார்கள். கட்சி சார்பில் இங்கே கேள்விகள் அனுமதிக்கப்படுவது இல்லை. உறுப்பினர்கள் கேட்ட கேள்விகள் துறைகளுக்கு அனுப்பப்படுகின்றன. துறைகளில் இருந்து விடைகள் வரப்பெற்றுள்ள வினாக்கள் இங்கே முறைப்படி எடுத்துக்கொள்ளப் பெறுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ளது போல், திருமதி இராஜாம்பாள் எழுப்பிய

(பேரவைத் தலைவர்)

கேள்வி பட்டியலில் இடம்பெற்றுள்ளது. அந்த அம்மையார் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் என்று எண்ணுகிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது சரியல்ல. மாண்புமிகு உறுப்பினர் கட்சியைப் பற்றிக் குறிப்பிட்டதால் இதைத் தெரிவிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. கேள்விகள் அனுமதிப்பதில் எந்தவிதமான பாரபட்சமும் காட்டப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆ. அரசாங்க விழாக்களில் தொகுதி உறுப்பினர் கலந்து கொள்வது.

*திருமதி. தா. இராசாம்பாள் : மாண்புமிகு தலைவரவர்களே, அரசு விழாக்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவர்கள் கலந்து கொள்ள வாய்ப்பு இல்லாமல் அழைப்பிதழில் பெயர் சேர்க்கப்படாமல் விடப்பட்டு இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே அண்மையில் ஒரு விழாவில் என்னுடைய பெயர் விடுபட்டதால் சம்பந்தப்பட்ட அமைச்சருடைய கவனத்திற்கு நான் முன்னதாகவே கொண்டு வந்திருந்தும் அந்த அமைச்சர் விழாவிலே கலந்து கொண்டுள்ளார், எனக்கு அழைப்பு இல்லை. இப்படி பல நிகழ்ச்சிகள் என்னுடைய தொகுதியில் மட்டுமல்ல; பல்வேறு தொகுதிகளில் நடைபெறுகின்றன,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை அரசுக்கு நீங்கள் எழுதி அனுப்பி, பதில் பெற்றுக்கொள்ளலாம். (கூச்சல், குழப்பம்) மாண்புமிகு உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் பேசக் கூடாது. இங்கே கோபப்படவும் கூடாது. எல்லோரும் உட்காருங்கள்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: ஆளுங்கட்சி உறுப்பினர் பேசக் கூடாதா?

THIRU T. VENKATA REDDY: Whenever the opposition members speak. it has become the practice to obstruct them.

MR. SPEAKER: What is the point This is not connected with you.

திருமதி தா. இராசாம்பாள்; தற்போது என்னுடைய தொகுதியில் நடைபெற்ற அரசு விழாவில் என் பெயர் விடப்பட்டிருக்கிறது என்று தெரிந்து. நான் முன்கூட்டியே அமைச்சருக்கு ஆள் மூலம் தகவல் தெரிவித்தும், எனக்கு அழைப்பு வரவில்லை, அமைச்சர் கலந்துகொண்டார். மேலும் இந்த மாதிரியான அரசு விழாக்களை நடத்தும் அதிகாரிகள் தங்களுடைய சம்பளத்திலிருந்து அதற்கான தொகையை செலவழிகிறார்களா அல்லது அரசு அதற்கான தொகையைக் கொடுக்கிறதா என்பதை அமைச்சர் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல் இப்படி நடை